# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1997 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கெப்டன் அநுருத்த பராக்ரம விஜேவன்த ஞாபகார்த்த, கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 07 ஆம் திகதி
அத்தாட்சிப்படுத்தப்பட்டது ]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1997, ஏப்ரில் 11 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக
வெளியிடப்பட்டது.

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 6.30 | தபாற் செலவு : ரூபா 2.50

## 1997 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க கெப்டன் அநுருத்த பராக்ரம விஜேவன்த ஞாபகார்த்த, கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 77/93

## கெப்டன் அநுருத்த பராக்ரம விஜேவன்த ஞாபகார்த்த கலாச்சார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான ஒரு சட்டம்

"கெப்டன் அநுருத்த பராக்ரம விஜேவன்த ஞாபகார்த்த கலாச்சார மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும்பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் மாத்தறை, மாரம்பே என்னுமிடத்தில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்கானதாகவிருக்கு மாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1997 ஆம் ஆண்டின், 3 ஆம் இலக்க, கெப்டன் அநுருத்த பராக்ரம விஜேவன்த ஞாபகார்த்த கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப்பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கெப்டன் அநுருத்த பராக்ரம விஜேவன்த ஞாபகார்த்த கலாச்சார மன்றத்தின் உறுப்பினர்களாக தற்போதுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும், (இதனகத்துக்கப் பின்னர் "கூட்டுத் கெப்டன் அநுருத்த பாராக்ரம விஜேவன்த ஞாபகார்த்த கலாச்சார மன்றத்தைக் கூட்டிணைத் தல்.

தாபனம்"எனக் குறிப்பீடு செய்யப்படும்)"கெப்டன் அநுருத்த பராக்ரமவிஜேவன்த ஞாபகார்த்த கலாச்சார மன்றம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் வேண்டும். அத்துடன் அது அப் பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத் தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்து வமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிகோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இலங்கையின் சுதந்திரத்திற்காகவும் ஒருமைப் பாட்டுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட கெப்டன் அநுருத்த பராக்ரம விஜேவன்த அவர்களின் நினைவை நிலைபெறச் செய்யுமுகமாக அவரது மூதாதையருக்குச் சொந்தமான இல்லத்தில் சமூக நலனோம்பு நிலையமொன்றை நிறுவுதலும் ;

(ஆ) கதியற்ற வயோதிபர்களின் பராமரிப்புக்காக பராமரிப்பு நிலையமொன்றை நிறுவி, அவர்களது உடல், உள, புலமைத்துவ தேவைகளை வழங் குதலும் சமூக செயற்பாடுகளிலும் மத வழிபாடு களிலும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கு வசதி செய்து கொடுத்தலும்;

(இ) இடப்பரப்பிலுள்ள வயது வந்தவர்களுக்கு, வாசிக்கும் பழக்கத்தை மேலோங்கச் செய்வதற்கு, மாணவர்களின் தேவைப்பாட்டுக்காக புத்தகங் களை இரவல் மற்றும் உசாத்துணை வசதிகளுடன் கூடிய நூல் நிலையமொன்றைத் தாபித்தலும் பராமரித்தலும் ;

(ஈ) பொதுப் பரீட்சைகளில் சித்தியெய்துபவர்களும் வசதியற்றவர்களுமான மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களை வழங்குதலும் ;

(உ) உதவி தேவைப்படும் அநாதைகளுக்கும், நோயாளிகளுக்கும் வைத்திய உதவிகள், உடை அத்துடன் உறைவிட வசதிகளை வழங்குதலும் ;

(ஊ) செவிப்புலனற்ற, கட்புலனற்ற அங்கவீனமுற்ற மற்றும் மனநோயுற்ற ஆட்களுக்கு நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தலும் ;

(எ) சமுதாயத்தின் சமூக, பொருளாதார, மத கலாச்சார தேவைப்பாடுகளை இனங்கண்டு அத்தேவைகளை நிறைவேற்றுவதற்காக சமுதாயத்தின் பொது நலனுக்கு உசிதமான திட்டங்களை, நிகழ்ச்சிகளையும், ஒழுங்கு செய்து நிறைவேற்றுதலும்; பொதுவாக சமூகத்தின் பொதுநலனுக்கு ஏதுவாகக்கூடிய கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், வகுப்புகள், மாநாடுகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தலும், ஏற்பாடு செய்தலும் ஊக்குவித்தலும் நடாத்துதலும்;

(ஐ) வடக்குக்கிழக்குப் போராட்டத்தில் நாட்டுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்த வீரர்களை நினைவுகூருவதற்கு அதே போன்ற குறிக்கோள்களையுடைய வேறு ஒழுங்கமைப்புகளுடனும் ஒன்றிணைந்தும் ஒத்துழைத்தும் செயற்படுதலும் அத்தகைய வீர இலங்கைப் புத்திரர்களின் குடும்பங்களுக்கு, முடியுமான போதெல்லாம் உதவி வழங்குதலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும், சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்யவும், புரியவும்,

நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், பிணைப்பொறுப்புடனோ, இல்லாமலோ பணத்தைக் கடனாகப் பெறுதல், திரட்டுதல், மானியங் களையும் கொடைகளையும் பெறுதல், சேகரித்தல் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடு படுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத் தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தில் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படும் முகாமைக் குழுவொன்றினால், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் விதிகள்.

**6.** (1) பொதுக்கூட்டம் எதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைக்கொண்டு, இச் சட்டத்தினதும்வேறேதேனும்எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக் குக்காலம் ஆக்குதலும் அவற்றை மாற்றுதலும் வேறுபடுத் தலும் திருத்துதலும் அல்லது ஒழித்தலும், கூட்டுத்தாபனத் திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைந்தோராதலும் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் இலச்சினை.

**7.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாப னத்தின் முகாமைக்குழு உறுப்பினர்கள் இருவரினது முன்னிலையிலன்றி எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது அத்துடன் அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல்வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

8. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**அட்டவணை** (பிரிவு 2)

உறுப்பினர் பெயர்ப் பட்டியல் :
விஜேவன்த குடும்பத்துக்காக:—

1. திரு. என். டபிள்யூ. ஈ. விஜேவன்த
2. செல்வி மதுஹாசனி விஜேவன்த
3. திரு. புத்திநாத விஜேவன்த
4. திரு. தயாநந்த விஜேவன்த
5. திரு. இந்திரஜித் விஜேவன்த
6. டாக்டர் ஜகத் ஆரியரத்ன
7. டாக்டர் நிசாந்த நாணாயக்கார
8. திரு. பெனட் லியனகே
9. திரு. குமார ஜீரசிங்க
10. திரு. ரஞ்ஜித் விஜேவன்த
11. திரு. என். டபிள்யூ. ஆரியசிங்க
12. திரு. முதித ஆரியரத்ன

கிராம வாசிகளுக்காக :-

13. வண. கலாநிதி மாவனானே தேவாநந்த தேரர், கனேகம ரஜமகா விகாரையின் அதிபர், மாரம்ப.
14. திரு. டீ. ரத்நாயக்க, ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், மாரம்ப
15. திரு. என். வி. சந்திரதாச, தொழிலதிபர், அக்குரஸ்ஸ
16. திரு. உதய தேசப்பிரிய விக்கிரமசிங்க

பதவி வழியால் :-

17. அரசாங்க அதிபர், மாத்தறை
18. சமூகசேவைப் பணிப்பாளர்
19. ஓய்வூதியப் பணிப்பாளர்
20. இலங்கை இராணுவத்தின் மின்னியல் அத்துடன் இயந்திரப் பொறியியற் பகுதியின் கொமாண்டர்.
21. சமூகசேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான, தென் மாகாண அமைச்சுக்கள் சபையின் அமைச்சருடைய அமைச்சுச் செயலாளர்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.